00122

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞானங்கள் பீடம்

சட்டக்கற்கைகள் திணைக்களம்

சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - 2023/2024

மட்டம் - 05

**LLU6716/LWU4324– வர்த்தகச் சட்டம்**

இறுதிப் பரீட்சை

காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : 18.05.2025 நேரம்: பி.ப 01.30 - பி.ப 04.30

மொத்த வினாக்களின் எண்ணிக்கை - 08

ஐந்து (05) வினாக்களிற்கு மாத்திரம் விடையளிக்குக.

தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. “பொருட்கள் விற்பனை தொடர்பான சட்டத்தின் பொதுவான விதியானது பொருட்களின் உடைமையுடனான ஆபத்து (risk) ஆகும்.”

   மேற்குறிப்பிட்ட கூற்றை பொருத்தமான நியதிச்சட்ட உறுப்புரைகள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகள் என்பனவற்றை சுட்டிக்காட்டி ஆராய்க.

   (20 புள்ளிகள்)

2. நிமல் என்பவன் தங்குமிடம் ஒன்றை சொந்தமாகக் கொண்டிருந்தான். அவன் நோவா எலொக்ரோனிக்ஸ் பிரைவெட் லிமிட்டட் எனும் புதிய மற்றும் சீர் செய்யப்பட்ட இலத்திரனியல் பொருட்களுக்கான பிரபல்யமான வர்த்தக கம்பனியிடம் இருந்து ஒரு நுண்ணலை அடுப்பு (Microwave) ஒன்றை வாங்கினான். அவன் தனது கடனட்டையில் இருந்து 35,000 ரூபாவைத் செலுத்தினான். கொள்வனவின் போது நிமல் நுண்ணலை அடுப்பின் பாவனை மற்றும் பாதுகாப்புக் குறித்து நோவா எலெக்ரோனிக்கிடம் விசாரித்ததுடன் அதன் கொள்வனவுப் பற்றுச்சீட்டு ஆனது அந்நுண்ணலை அடுப்பு புதியது என்றும் **“வீட்டு மற்றும் வர்த்தகப் பாவனைகளுக்கு உகந்தது”** என்றும் தெளிவாகக் குறிப்பிடுகிறது. நுண்ணலை அடுப்பை பெற்ற நிமல் அதனை பாவனை செய்ய ஆரம்பித்தான்.

   சில வாரங்களின் பின்னர், நுண்ணலை அடுப்பை பாவிக்கும் போது அதிலிருந்து ஒரு எரியும் வாசனை வருவதை உணர்ந்த போதும், அவன் தொடர்ந்தும் அதனைப் பாவனை செய்தான். கொள்வனவு செய்து மூன்று மாதங்களின் பின்னர் நுண்ணலை அடுப்பில் ஒரு துரித உணவை வைத்த அவனது இளம் மகள் றுவனி சமையலறையில் இருந்து நீங்கி இருந்தாள். இருபது நிமிடங்களின் பின்னர் அவள் மீண்டும் வந்த போது இலத்திரனியல் அடுப்பில் தீப்பற்றி இருந்ததுடன் தீச்சுவாலை சமையலறையில் பரவுவதை அவள் அவதானித்தாள். அவள் சுவரிலிருந்த மின் தடுப்பான் (Socket) மூலம் நுண்ணலை அடுப்பை அணைப்பதற்கு முயற்சி செய்த போது அவளிற்கு பல மின்சாரத் தாக்கங்கள் ஏற்பட்டது.

தீ பற்றியிருப்பிற்கான காரணம் குறித்து கூறுகின்ற நிபுணர்கள் சீர் செய்யப்பட்ட பிழையான மின்சார உள்ளமைப்பு (Faulty wiring) எனத் தெரிவித்தனர். மேலும் அவர்கள் இது புதிய நுண்ணலை அடுப்பு ஒன்று அல்ல என்றும் உறுதி செய்தனர்.

நோவா எலென்ரோனிக்ஸ் ஆனது விற்பனை ஒப்பந்தத்தில் ஏதேனும் வாசகங்களை மீறியுள்ளதா என அறிய நிமல் விரும்புகிறார்.

நிமலுக்கு அறிவுறுத்துக.

பொருத்தமான நியதிச்சட்ட உறுப்புரைகள் மற்றும் தீர்ப்புச்சட்டங்கள் என்பவற்றால் உமது விடையை ஆதாரப்படுத்துக.

**(20 புள்ளிகள்)**

3. "தவணைக் கொள்வனவு உடன்படிக்கைகள் (hire purchase agreements) ஆனவை பொருட்களை மீள் உடைமை செய்தல் மீதான இலங்கையின் சட்டம் ஆனது வாடகைக்கு பெறுபவர் மற்றும் உரிமையாளர் இருவரதும் உரிமைகளுக்கான செயற்திறனான பாதுகாப்பை வழங்குகிறன."

   மேலுள்ள கூற்றின் அடிப்படையில் 29ஆம் இலக்க 1982ஆம் ஆண்டின் நுகர்வோர் கடன் சட்டம் (Consumer Credit Act) என்பதன் பொருத்தமான உறுப்புரைகளை எடுத்துக்காட்டி ஒவ்வொரு திறத்தினதும் உரிமைகள் மற்றும் கடமைகளை ஆராய்க.

**(20 புள்ளிகள்)**

4. நதீரா எனும் வீட்டு அலங்கார பொருட்களின் கடையொன்றின் உரிமையாளர் தனது கடையின் மீதும் அதன் பொருட்களின் மீதும் சேவ் கெவன் இன்சுரன்ஸ் கோப்பிரேசன் லிமிட்டட் உடன் தீ காப்புறுதி கொள்கை ஒன்றை மேற்கொண்டாள். விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்யும் போது **"உமது காப்புறுதிக் கொள்கை ஒன்று இரத்துச் செய்யப்பட்டு அல்லது மறுக்கப்பட்டுள்ளதா? "** என்ற கேள்விக்கு அவள் தனது ஆரோக்கிய காப்புறுதிக் கொள்கைக்கான செலுத்துகைகள் செலுத்தப்படாமையால் புதுப்பிக்கப்பட மறுக்கப்பட்டிருந்த போதும் **"இல்லை"** என அவள் விடையளித்தாள். **"உமது கடை தீயால் பாதிக்கப்படுமெனில் ஏதேனும் முக்கிய ஆபத்து காணப்படுகிறதா? "** என்ற கேள்விக்கு பதிலாக அவள் **"இல்லை"** என பதிலளித்தாள்.

   எவ்வாறாயினும் நதீராவின் வியாபார எதிர் போட்டியாளரான அர்ச்சுன் என்பவன் அவள் அவனுடன் போட்டியிட்டால் அவளது கடையை எரித்து விடுவதாக எச்சரித்து இருந்தான். அதனை ஒரு முக்கிய ஆபத்தாக கருதாத நதீரா கவனத்திற்கு எடுக்காமல் இருந்தாள். பல மாதங்களின் பின்னர் காப்புறுதிக் கொள்கை அவளிற்கு வழங்கப்பட்டது. நதீரா அவளது கடையை அதனொரு பகுதியை உணவு மற்றும் பானங்கள் விற்பனை செய்யும் சிறிய கடை ஒன்றாக மாற்றியமைத்து திருத்தம் செய்தாள். திருத்தம் குறித்து சேவ் கெவன் இன்சுரன்ஸ் கோப்பிரேசன் லிமிட்டட் இற்கு தெரிவிக்க அவள் தவறியிருந்தாள்.

ஒரு நாள் மாலை அறிவிக்கப்பட்டிருந்த மின்சார தடையின் போது கடைக்கு ஒளியூட்டுவதற்காக வாயு விளக்குகளை (Portable gas lamps) அவள் பாவித்து இருந்தாள். எவ்வாறாயினும் அவள் கடையை விட்டு நீங்கிய போது அவ்விளக்குககளை அணைப்பதற்கு மறந்து இருந்ததுடன் அவை பின்னர் கீழ் விழுந்து கடை தீப்பற்றியது. இத் தீ கடைக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தியது. நதீரா சேதத்திற்கான இழப்புகளை கோரியிருந்தாள்.

சேவ் கெவன் இன்சுரன்ஸ் கோப்பிரேசன் லிமிட்டட் ஆனது காப்புறுதியின் அடிப்படை கோட்பாடுகளை அவள் மீறியதாக எடுத்துரைத்து அவளிற்கு காப்புறுதியை செலுத்த தற்போது மறுக்கிறது.

நதீரா தான் காப்புறுதியின் எக்கோட்பாடுகளை மீறி இருப்பதாக கூறப்படுகிறது என தெரிந்து கொள்ள விரும்புகிறாள்.

நதீராவிற்கு அறிவுறுத்துக.

(20 புள்ளிகள்)

5. ஆயிசா என்பவள் ஒரு சிறிய உணவு தயாரிக்கும் வியாபாரத்தை கொழும்பில் கொண்டுள்ளதுடன் கடைகளுக்கு பொதியிடப்பட்ட சிற்றுண்டிகளை வழமையாக விநியோகிக்கிறாள். அண்மையில் உணவு அதிகார சபை அவளது தொழிற்சாலை மீது ஒரு சோதனையை மேற்கொண்டிருந்தது. சோதனையின் போது உணவு அதிகார சபையின் அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரி ஒருவர் உணவுச் சட்டத்தின் நெறிமுறைகளுக்கு இணங்கவில்லை என காரணம் காட்டி பல உணவுப் பொதிகளைக் கைப்பற்றினார். அந்த அதிகாரி ஆயிசாவின் இணக்கமின்றி ஆய்வுகூட சோதனைக்கான மாதிரியாக உணவுகளையும் சேகரித்து இருந்தார்.

அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியின் நடவடிக்கைகள் குறித்த கவலையுற்ற ஆயிசா அவரால் தனது உரிமைகள் மீறப்பட்டதாக நம்புகிறாள். தனது அனுமதி இல்லாமல் அதிகாரி உணவுகளை கைப்பற்றவும் அவற்றை மாதிரியாக எடுக்கவும் ஏதேனும் சட்ட அதிகாரம் காணப்பட்டதா என்பது குறித்து அவள் உறுதியற்று இருந்தாள்.

26ஆம் இலக்க 1980ஆம் ஆண்டின் உணவுச்சட்டத்தின் கீழ் உணவு அதிகார சபைக்கான அதிகாரங்கள் குறித்து ஆயிசாவிற்கு அறிவுறுத்துக. உமது விடையை பொருத்தமான நியதிச்சட்ட உறுப்புரைகள் மற்றும் தீர்ப்புச்சட்டம் என்பனவற்றால் ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)

6. "விலைக்கொள்ளா விற்பனையாளர் (Unpaid Seller) ஒருவர் கொள்வனவாளருக்கு பொருட்களின் உடைமை வழங்கப்படாது இருப்பின் அப்பொருட்களின் மீது அவரது உரிமைகளை செயற்படுத்த முடியும்."

ஒரு விலைக்கொள்ளா விற்பனையாளரின் உரிமைகள் தொடர்பான சட்ட நிலையை மேலுள்ள கூற்று சரியாக பிரதிபலிக்கிறதா?

உமது விடையை பொருத்தமான நியதிச்சட்ட உறுப்புரைகள் மற்றும் தீர்ப்புச்சட்டம் என்பனவற்றால் ஆதாரப்படுத்தி ஆராய்க.

(20 புள்ளிகள்)

7. "கைமாற்றத்தகு சாதனம் என்பது ஒரு வழக்குரிய திணை (உடைமையைக் கொண்டிருத்தலிற்கு எதிரானது) (வழக்கிடும் உரிமை) (Chose in action) ஆகும். ஒன்றின் மீது ஒரு நபரிற்கு உடைமை அல்லது உண்மையான அனுபவிப்பு இருப்பின் உடைமையை ஏற்றல் (உடைமையை கொண்டிருக்கத்தகு உரிமை) (Chose in possession) ஒன்றைக் கொண்டிருப்பதாக கருதப்படும். எவ்வாறாயினும் வழக்கு ஒன்றின் மூலம் வேண்டுவதற்கு அல்லது கோருவதற்கு உள்ள வெறும் உரிமை ஆனது, உதாரணமாக – அவருக்கு கிடைக்கவேண்டிய ஒரு கடன் போன்றது, அதன் போது அவரிற்கு வழக்குரிய திணை ஒன்று உள்ளதாக கருதப்படும்."

Borrie, Gordon J, Commercial Law (5th Ed 1980) p 213

சாதனங்களின் வரலாற்று பரிணாமத்தை மேலுள்ள கூற்றின் அடிப்படையில் ஆராய்க.

(20 புள்ளிகள்)

8. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் <u>இரண்டினை (02)</u> விளக்குக.

அ) தான் கொண்டிராததை யாரிற்கும் கைமாற்ற இயலாது (*Nemo dat quod non habet*)

ஆ) புறக்குறிப்பிடல் வகைகள் (Types of Indorsements)

இ) நாணய மாற்றுண்டியல் ஒன்றின் அடிப்படை உள்ளடக்கங்கள் (The Fundamental elements of a Bill of exchange)

ஈ) காசோலைகளை குறுக்கிடுதல் (Crossing cheques)

(10x2=20 புள்ளிகள்)

- முழுப்பதிப்புரிமை பெற்றது -